# <u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**முன்னிலை. திருமதி.S..சுஜாதா, எம்.ஏ., எம்.எல்.,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை

**I.A.No.2/2024**
**In**
**I.D.No.51/2023**

M.சுரேஷ், (வயது-39, E.No.0803002)
த/பெ.E.மோகன்,
எண்.2, சாஸ்திரி நகர், 3வது தெரு,
ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088. ...... மனுதாரர்/மனுதாரர்

/எதிராக/

நிர்வாகம்,
Daeseung Auto Parts India Private Limited,
எண்.474, மண்ணூர் கிராமம்,
வளப்புரம் அஞ்சல்,
ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் - 602 105. ...... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இந்த மனு கடந்த 14.11.2024 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திருவாளர்கள்.S.குமாரசாமி, K.பாரதி, K.சுரேஷ், M.K.நிவேதா மற்றும் J.மோகன்ராஜ் ஆகியோர் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் M/s.வாட் லீகல், G.ஆப்பிரகாம் பிரபு, D.வெங்கடராமன், மேத்யூ மார்செல், P.A.பராசரண் மற்றும் G.காவ்யர் ஆகியோர் ஆஜராகி, இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலித்து இன்று நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

1) I.D.51/2023 என்ற வழக்கில் மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் மீது நிர்வாகம் விசாரணை அதிகாரி முன்பு நடத்திய உள்துறை விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளை பின்பற்றியும் நடந்ததா? இல்லையா? என்ற பூர்வாங்க எழுவினாவை முதன்மை எழுவினாவாக தீர்மானிக்க வேண்டுமென்று கோரி தொழிற்தகராறு சட்டப்பிரிவு **11**ன் கீழ் இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:-</u>**

மனுதாரர் I.D.51/2023 என்ற வழக்கில் மனுதாரர் ஆவார். இந்திய உச்ச நீதிமன்றம் **Cooper Engineering Limited -Vs- Shri P.P.Mundhe** என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பின்படி உள்ளக விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு புறம்பாக நடத்தப்பட்டதா? என்பதை மட்டுமே பூர்வாங்க எழுவினாவாக விசாரிக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பிரதான வழக்கின் கோரிக்கை மனுவில் மனுதாரர். 03.10.2022 தேதியிட்ட கடிதம் மூலம் 30.09.2022 தேதியில் உள்துறை விசாரணையில் நிர்வாகம் கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பதால் தமிழில் மொழிபெயர்த்து தந்தால் கேள்வி கேட்கும்போது பதில் அளிக்கவும், குறுக்கு விசாரணை செய்ய இயலும் என்றும், அன்றைய விசாரணை நடத்தியது சம்மந்தமான எந்த குறிப்புகளும் வழங்கப்படவில்லை என்றும், மனுதாரர் தரப்பில் அளித்த கடிதங்களை குறியீடு செய்யவில்லை என்றும், மேலும் மனுதாரர் குறுக்கு விசாரணை செய்யவும், மனுதாரர் தரப்பில் சாட்சியை ஆஜர்படுத்தவும் உரிய வாய்ப்பு விசாரணை அதிகாரியால் வழங்கப்படவில்லை என்றும், விசாரணை நடவடிக்கை குறிப்புகள் வழங்கப்படவில்லை என்றும், விசாரணை அதிகாரி ஒருதலைபட்சமாக இயற்கை நியதி கோட்பாடுகளுக்கு புறம்பாக நடந்துக்கொண்டதாகவும் உரிய வாய்ப்புகள் வழங்கி விசாரணை நடத்துமாறு கோரியிருந்தார். மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்விசாரணையில் குற்றச்சாட்டுகள்

நிரூபிக்கப்படவில்லை என்றும் உள்துறை விசாரணை ஒருதலைபட்சமாக இயற்கை நியதிக்கு புறம்பாக நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் மனுதாரரை 12.11.2022 தேதியில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேற்படி உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மனுதாரரோ, எதிர்மனுதாரரோ தனியாக இடைமனு எதுவும் தாக்கல் செய்யாமல் Suomotoவாக இந்நீதிமன்றம் உள்ளக விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு புறம்பானதா, இல்லையா என்பதை frame செய்து முடிவு செய்ய முடியும். உள்துறை விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு புறம்பாக நடந்தது என்பதற்கு மனுதாரர் முதன்மையாக நிரூபிக்க போதுமான முறையான வாய்ப்பு தரவில்லை. ஆகவே பிரதான வழக்கை விசாரணை செய்வதற்கு முன்பு உள்துறை விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டதா? இல்லையா? என்ற முதல்நிலை எழுவினாவாக எடுத்துக்கொண்டு விசாரணை செய்யப்பட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் ஃபோர்க்லிஃப்டரை உதவியாக கொண்டு நிறுவனப்பொருட்களை மோசடி செய்தல் மற்றும் திருடுவதில் ஈடுபட்டுள்ளார். மேலும் அவருக்கு Gpay ஆன்லைன் மூலம் கமிஷன் செலுத்தியது மற்றும் இந்தியமார்ட் இணையத்தளத்தில் ஆன்லைனில் விற்றது மூலம் நிர்வாகத்திற்கு ரூ.1.5 கோடி இழப்பு ஏற்படுத்தியுள்ளார். ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டு நியாயமான முறையில் அனைத்து விசாரணைகளின் ஆவணங்களும், மனுதாரருக்கும் வழங்கப்பட்டு, வாய்ப்புகள் வழங்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு அளித்த உள்துறை விசாரணை அதிகாரியின் முடிவு அறிக்கையின்படி மனுதாரர்கள் மற்றும் 5 ஊழியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். உள்துறை விசாரணையின் தீர்ப்பின்படி வழக்கில் தீர்ப்பளிக்க முடியாது. பிரதான வழக்கில் இருதரப்பிலும் விசாரணை செய்தே முடிவு செய்யப்படும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைக்கால மனுவில் மனுதாரர் செய்த குறைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தீய

நோக்கத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் நடத்தப்பட்ட உள்துறை விசாரணையானது தொழில் துறை நிறுவனத்தை நிர்வகிக்கும் மற்றும் இயற்கை நீதியின் கொள்கைகளை கடைபிடிக்கும் நிலையாணையிலுள்ள விதிகளின்படி நடந்துள்ளது. மேலும் சட்டப்பிரிவு 10,11,11A (or) 33 ன்கீழ் தொழிலாளர் நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயத்தில் உள்துறை விசாரணை அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து புகார் அளித்தால் முதலில் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் சட்டப்பூர்வமான பிரச்சனை மற்றும் உள்துறை விசாரணையின் முடிவு அல்லது வேறுவிதமாக முடிவு செய்ய மனுதாரருக்கு அழைப்பதன் மூலம் எதிர்மனுதாரருக்கும் புதிய அறிவிப்பை வழங்கவும், குற்றச்சாட்டை நிரூபிக்க மேலும் ஆதாரங்களை சேர்க்கவும் மேலும் உள்துறை விசாரணையை ஆரம்ப பிரச்சனையாக கருதுவது தேவையற்றது மற்றும் வழக்கை நடத்துவதில் தேவையற்ற தாமதத்தை ஏற்படுத்தும். **Cooper Engineering Limited Vs Shri.P.P.Mundhe in Karnataka State Road Transport Corporation -Vs- Lakshmidevamma, MANU /SC/0314/2001** என்ற வழக்கில் உள்துறை விசாரணையின் முடிவை மட்டும் கருத்தில் கொள்ளாமல் தொழிலாளர் நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும் உள்துறை விசாரணையின் செல்லுபடியாகும் தன்மையையும் வழக்கின் தகுதியையும் ஒன்றாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. அதனால் முதல்நிலை விசாரணை தேவையில்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் **Davalsab Hussain sab Mulla -Vs- North West Karnataka Road Transport Corporation** என்ற வழக்கில் தொழிலாளர் நீதிமன்றம் சட்டப்பிரிவு 11Aன்படி நியாயமாகவும், நீதியாகவும் அதிகாரத்தை பயன்படுத்தி விசாரணை நடத்தலாம் என்று தெரிவித்துள்ளது. மேற்கூறிய விதியின் கீழ் பணி நீக்கம் அல்லது பணி நீக்கத்தை ரத்து செய்ய தொழிலாளர் நீதிமன்றத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய நிலையில் ஒவ்வொரு வழக்கின் உண்மைகளையும் சூழ்நிலைகளையும் சார்ந்து சட்டப்பிரிவு 11Aன்படியும் இருக்க வேண்டும். தொழிலாளியையும் அவரது குடும்ப

உறுப்பினர்களையும், வாழ்வாதாரத்தை இழக்க செய்வர் சம்பந்தப்பட்ட தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கிய முதலாளிக்கும் சமமான உரிமை உண்டு. சம்மந்தப்பட்ட பணியாளர் நிறுவனத்தில் மிகுந்த ஒழுக்கத்தை பேணுவதையும், நிறுவனத்திற்குப் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைக்கு முறையாக இணங்குவதையும் உறுதி செய்ய வேண்டும். அந்த வகையில் இருவருக்கும் இடையே உள்ள உறவு சமமான அளவில் பரஸ்பரம் இருப்பதால் கூறப்பட்ட காரணங்களுக்காகவும், நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தைக்காகவும் பணி நீக்கம் மற்றும் பணி நீக்க செய்வதற்கான அதிகாரத்தை முதலாளி தேர்வு செய்திருந்தால் அத்தகைய தண்டனையில் குறுக்கீடு செய்யக்கூடாது. எனவே நிறுவனம் மற்றும் அதன் சக ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் பணியாளர்களின் நடத்தை மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும், எனவே பிரிவு 11A ன் கீழ் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள விருப்புரிமையைப்பயன்படுத்துவதற்கு முற்றிலும் வாய்ப்பில்லை என்று இவ்வழக்கில் முடிவு செய்யப்பட்டது.

மனுதாரருக்கு உள்துறை விசாரணையில் கோரிக்கையை நிரூபிக்க போதிய அவகாசம், வாய்ப்பு வழங்கப்பட்டும், அவ்வாறு செய்யத்தவறியதால் நிறுவனத்தின் நிலையாணை விதிகள் மற்றும் இயற்கை நீதிக்கோட்பாடுகளின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு மனுதாரர் பணி நீக்கம் செய்யப்பட்டார். மனுதாரர் தண்டனை விதிகளின் கீழ் குற்றம் செய்திருந்ததாலும், வழக்கை நீடிக்கவும், தாமதப்படுத்தும் நோக்கதில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் முதல்நிலை எழுவினாவாக வனைந்து தீர்வு காணப்பட வேண்டுமென்ற கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **மனுதாரர் கோரியவாறு வழக்கில் முதல்நிலை எழுவினா வனைந்து தீர்வு காணப்பட வேண்டுமென்ற மனுதாரரின் கோரிக்கை சரியானதா?**

**5**) மனுதாரர் எதிர்மனுதாரரிடம் Production பிரிவில் தொழிலாளியாக வேலை செய்து வந்ததாகவும், கடந்த 18.08.2022 தேதியில் எதிர்மனுதாரர் நிறுவனம் தற்காலிக

பணி நீக்க உத்தரவை அளித்ததாகவும், அந்த உத்தரவில் காவல் துறையினர் தேவகுமார் என்ற தொழிலாளி எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உள்ள உதிரி பாகங்களை வாகனத்தில் திருடி எடுத்து சென்ற போது அவரை மடக்கி பிடித்து விசாரித்ததில் மேற்படி திருட்டு குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதாகவும், மேற்படி தேவகுமார் என்பவரும் அவருடன் சென்ற மற்றவர்களும் கைது செய்யப்பட்டதாகவும், எதிர்மனுதாரர் தரப்பில் இது குறித்து துறை பூர்வமான விசாரணை நடத்தப்பட்டபோது அங்கு விசாரித்த ஒரு நபர் கொடுத்த வாக்குமூலத்தில் இந்த மனுதாரரும் இந்த குற்ற சம்பவத்திற்கு உடந்தையாக இருந்ததாக குறிப்பிட்டு அதன்படி மனுதாரரும் மோசடி கையாடல் போன்ற குற்றச்சாட்டு நடவடிக்கையில் ஈடுபட்டதாக சொல்லப்பட்டிருப்பதாகவும், இது குறித்து மனுதாரருக்கும் குற்றச்சாட்டு குறித்து விளக்கக் கடிதம் அனுப்பியதாகவும், ஆனால் மனுதாரரின் விளக்க கடிதத்தை ஏற்றுக்கொள்ளாத நிர்வாகம் உள்துறை விசாரணை நடத்தப்பட்டு விசாரணை அதிகாரி அளித்த முடிவு அறிக்கையில் மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்ததன் பேரில் 12.11.2022 தேதியில் மனுதாரருக்கு அளித்த பணி நீக்கம் உத்தரவை ரத்து செய்து பணி தொடர்ச்சியுடன், பின் சம்பளம் மற்றும் இதர பயன்களுடன் மீண்டும் எதிர்மனுதாரர் வேலை வழங்க உத்தரவிட வேண்டுமென்று மனுதாரர் தொழிற்தகராறு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. ஏற்கனவே சமரச அலுவலர் முன்பு மனுதாரர் தொழிற்தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவிற்கு எதிர்மனுதாரர் நிர்வாகத்தரப்பில் ஆட்சேபனை செய்து பதில்வழக்குரை தாக்கல் செய்த நிலையில், மனுதாரர் குற்றச்சாட்டுகளை மறுத்ததால் சமரச முடிவு அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு மனுதாரர் தொழிற்தகராறு வழக்கு தொழிற்தகராறு சட்டப்பிரிவு 2A(2)ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்

7. மனுதாரரின் குற்றச்சாட்டின் மீது உள்துறை விசாரணை நடத்தப்படும் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டு, உள் துறை விசாரணை அதிகாரியாக ஓய்வு பெற்ற நீதிபதி

நியமிக்கப்பட்டதாகவும், அந்த விசாரணையானது முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட வேண்டுமென்று மனுதாரர் கடிதம் அனுப்பியதாகவும், ஆனால் விசாரணை நடைபெற்ற போது மனுதாரருக்கு தெரிந்த தமிழில் நடத்தாமல் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது என்றும், அதே போல் விசாரணை நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெறும் என்ற விளக்கம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படாமல், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு முரணான வகையில் நடத்தப்பட்ட நிலையில் மனுதாரர் தனது தரப்பு விளக்கத்தை அளிப்பதற்காக அனுமதிக்கப்படவில்லை என்றும், விசாரணை நடத்தியது சம்மந்தமான எந்த குறிப்புகளும் வழங்கப்படவில்லை என்றும், மனுதாரர் அனுப்பிய கடிதங்களை விசாரணையில் குறியீடு செய்யவில்லை என்றும், வனராஜ் மற்றும் பாக்கியராஜ் அவர்களை மேலும் குறுக்கு விசாரணை செய்யவும், மனுதாரர் தரப்பு சாட்சிகளை ஆஜர்படுத்தவும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும், மனுதாரர் உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்ட போதும் விசாரணை அதிகாரி ஏற்றுக்கொள்ளாமல் ஒருதலைபட்சமாக தன்னுடைய விசாரணையை நடத்தி முடிவு அறிக்கை வழங்கியுள்ளார் என்றும், எனவே உள்துறை விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடைபெற்றுள்ளதா? இல்லையா? என்ற முதல்நிலை எழுவினாவை தீர்மானிக்க முதல் நிலை விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இம்மனுவில் கோரியுள்ளார்.

8. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் நிர்வாகத்திற்கு ரூ.1.5 கோடி இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்றும், அதனால் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி விசாரணை அதிகாரியாக நியாமிக்கப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டு நியாயமான முறையில் அனைத்து விசாரணைகளின் ஆவணங்களும் வழங்கப்பட்டு, மனுதாரருக்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு அளித்த உள்துறை விசாரணை அதிகாரியின் முடிவு அறிக்கையின்படி மனுதாரர்கள் மற்றும் 5 ஊழியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாகவும், மேலும் பல் முன்னோடி வழக்கினை மேற்கோள் காட்டி உள்துறை விசாரணையின் முடிவு அறிக்கையை கொண்டே பிரதான வழக்கினை

தொடரலாம் என்றும், மனுதாரர் வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கத்திலே இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக கூறியுள்ளார்.

9. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள குறிப்புரையில் **Karnataka State transport Corporation -Vs- Lakshmidevamma & another** என்ற வழக்கின் தீர்ப்பில் இரு நீதிபதிகள் பெரும்பாண்மையாக 10(10 Reference லோ 33(2)(b) மனுவிலோ வழக்கு முடியும் வரை நிர்வாகத்திற்கு குற்றச்சாட்டுகள் நிரூபிப்பதற்கு வாய்ப்பு கேட்க முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது. உள்ளக விசாரணை முறையாக நடத்தப்பட்டதா என்ற முதல் நிலை எழுவினா வகுக்கப்பட கூடாது என Shankar Chakravarthy உச்ச நீதிமன்றம் வழக்கிலோ Karnataka State transport Corporation -Vs- Lakshmidevamma & another வழக்கிலோ சொல்லவில்லை. முதல்நிலை விசாரணையில் நிர்வாகத்திற்கு எதிராக ஒரு வேளை தீர்வமாகும் என்றால் அதன் பிறகும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்க வாய்ப்பு கேட்க முடியும். ஆகவே எதிர்மனுதாரர்/ நிர்வாகத்திற்கு முதல் நிலை எழுவினா வகுப்பது மூலமாக எந்த குந்தகமும் ஏற்படாது என்பதால் மனுதாரரின் இந்த இடைக்கால மனு அனுமதிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

10. ஏற்கனவே மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டின் பேரில் உள்துறை விசாரணை நடத்தப்பட்டுள்ள நிலையில் அந்த உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாக செய்யப்படவில்லை என்று ஆட்சேபனை தெரிவித்த காரணத்தினால் அந்த உள்துறை விசாரணை முறையாகவும் இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய விசாரணை நடவடிக்கை குறிப்புகள், விசாரணையில் தாக்கல் செய்துள்ள இருதரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், விசாரித்தும் முடிவு செய்ய முடியும் என்பதால் முதல் நிலை விசாரணை மேற்கொள்ள வேண்டும். முதல்நிலை விசாரணை தீர்வு காணப்பட்ட பிறகே பிரதான வழக்கின் விசாரணை தொடர ஏதுவாக இருக்கும் என்பதால் உள்துறை

விசாரணை முறையாகவும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? இல்லையா? என்ற எழுவினாவாக கொண்டு முதல் நிலை விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து/ தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.12.16 15:30:11 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.